# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

O.S.No. 93/2023

**CNR.No.TNCB19000**

Date, 18.11.2025 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சம்பத்குமார் | **வயது** | 46 |
| த/பெ | ராமகிருஷ்ணன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | கெண்டேபாளையம் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 18th November 2025

பி வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி எனது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார். 2ம் பிரதிவாதி ராஜேந்திரன் அவருடைய அப்பா ஈரண்ண கவுடரை அவருடைய இறப்பு வரை பார்த்து வந்தார் என்றால் நாங்கள் எல்லோரும் பார்த்து வந்தோம். ஈரண்ண கவுடரை அவருடைய மகன் 2ம் பிரதிவாதி பார்த்து வந்தார் என்றும் அதனால் அவரது பெயரில் 05.08.2011 ம் ஆண்டு ஒரு உயில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. உயில் எழுதி வைத்த பிறகு இன்று வரை 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் எங்களுடைய நான்கு நபர்களின் அனுபவத்தில் உள்ளது.

நானும் வாதி சுப்பம்மாளும் எந்த காலத்திலும் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு நான் உதவி செய்வதற்காக வழக்குரையை ஒத்துரைத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி ராஜேந்திரன் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரைய படித்து விபரம் தெரிந்து கொண்டேன். 2ம் பிரதிவாதி அவரது தந்தை ஈரண்ண கவுடரை உயிருடன் இருக்கும் காலம் வரை விவசாயம் செய்து நல்லமுறையில் பார்த்துக் கொண்டார் என்றால் நாங்கள் அனைவரும்

சேர்ந்துதான் பார்த்துக் கொண்டோம். வாதி சுப்பம்மாளுக்கு அவருடைய அப்பா உயிருடன் இருக்கும் காலத்தில் சில சொத்துக்களை வாங்கி கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. அவர் உயிருடன் இருக்கும் காலத்தில் சொத்துக்களை வாங்கிக் கொடுத்த விபரம் தெரியும் என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த உயில் சாசனப்படி ஈரண்ண கவுடர் இறந்த பிறகு தாவா சொத்தை அடைந்து இன்று வரை சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த உயிலை மறைத்து தாக்கல் செய்துள்ள இந்த தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு பாகம் கேட்க எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.11.18 19:21:33 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.